பயிலரங்க எண்ணிக்கை: 116 நாள்: 16.02.2026

**மொழியியல் புலம்**

**நடத்தும்**

## தமிழ் அணியிலக்கண மரபு
## Prosodic Tradition in Tami

**பயிலரங்கம் - 35**

**(10.3.2026 - 19.3.2026)**

**அறிவிப்பும் அழைப்பும்**

மொழியின் இலக்கண வளமானது அதன் கட்டமைப்பு, செறிவு, தொன்மை ஆகியற்றை விளக்குவதாக அமையப்பெறுகிறது. தொல்காப்பியம் காலந்தொட்டு தமிழ் இலக்கணத்தின் அமைப்பு பலநிலைகளில் வளர்ச்சியுற்று, அத்தகைய வளர்ச்சியின் பயனாகப் பல புதிய இலக்கண நூல்கள் தமிழில் தோன்றின. அவற்றுள் நன்னூல், வீரசோழியம், நேமிநாதம், இலக்கணவிளக்கம், இலக்கணக்கொத்து, தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் போன்றவை குறிப்பிடத்தக்கன. இந்நூல்கள் தமிழ்மொழியின் கட்டமைப்பில் உள்ள ஐந்திலக்கணமான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகியவற்றின் பயன்பாடுகள், சிறப்புகள் குறித்து எடுத்துரைக்கின்றன.

உலகமொழி இலக்கணங்களுள் பொருளுக்கு இலக்கணம் வகுத்துத் தமிழ்மொழி தனிச்சிறப்பிடம் பெறுகிறது. அந்த வகையில் தமிழின் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் உள்ள ஏழாவது இயலான உவமவியல் இங்குக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவ்வியலில் உவமைகள் தோன்றும் இடங்களாக வினை, பயன், மெய், உரு ஆகியவை குறிக்கப்பெறுகின்றன. மேலும்,

“உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை” (தொல்.1224)

என்னும் நூற்பாவின்வழி உவமையாகக் கூறப்படும் பொருள் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கிறது. அதோடு உவமையானது சிறப்பு, நலன், காதல், வலி ஆகிய பண்புகளை நிலைக்களன்களாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இவை போன்று செய்யுளில் உவமைகள் இடம்பெறுவது குறித்து விரிவாகப் பேசுகிறது. உவமவியலில் பொதிந்துள்ள செய்திகள் பிற்காலத்தில் அணி இலக்கணம் என்னும் பெரும் பிரிவு உருவாக விதையாக அமைந்தது.

அணி என்பதற்கு அழகு என்பது பொருளாகும். அணிகள் செய்யுள்களை அழகுறச் செய்கின்றன. கவிஞர் தான் கூற விளையும் கருத்துகளைச் செய்யுள் வடிவில் சொல்லாலும் பொருளாலும் அழகுபட எடுத்துரைப்பது அணியிலக்கணமாகும். இது செய்யுளில் பொதிந்துள்ள செறிவான செய்திகளை எளிமையாக நயத்துடன் மொழிகிறது. தொல்காப்பியத்தின் உவமவியலில் இருந்து கிளைத்துக் கி.பி.12ஆம் நூற்றாண்டில் தனியே அணி இலக்கணமாகத் தண்டியலங்காரம் உருவெடுத்தது. இதன்பின் மாறனலங்காரம், சந்திராலோகம், குவலயானந்தம் என அணி இலக்கணம் குறித்த நூல்கள் விரிகின்றன. இவ்வாறான நீண்ட மரபுத் தொடர்ச்சியைக் கொண்ட அணியிலக்கத்தின் இன்றைய வளர்ச்சிநிலை குறித்து ஆய்ந்து, ஆழ்ந்து அறியும் நோக்கில் இப்பயிலரங்கம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இப்பயிலரங்கில் மரபிலக்கணத் தெளிவும் பன்மொழிப் புலமையும் பெற்ற அறிஞர் பெருமக்கள் பயிற்றுவிக்க உள்ளனர். பல்கலைக்கழகம்/கல்லூரிகளில் தமிழியல், மொழியியல், ஆகிய துறைகளில் முனைவர் பட்ட / ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களை இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடையுமாறு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

- பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை **– 40**
- பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: **10.3.2026** முதல் **19.3.2026** முடிய **10** நாட்கள்.
- பயிலரங்கு நேரம்: காலை **10.00 - 1.00 &** மாலை **2.00 - 5.00**.
- பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
- பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
- பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.

❖ பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.

❖ இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/per3bVZoGXamsXwc6 என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (QR Code) மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

❖ நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் **02.03.2026** காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.

❖ செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **03.03.2026** அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.

❖ இப்பயிலரங்கில் பங்கேற்போர் **38** அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதமோ இடைநிற்றலோ இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.

❖ பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**